# பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY) சிறப்பு ராபி (சம்பா) பருவம் (2022 - 2023)

HDFC ERGO

**தமிழக அரசு மற்றும் இந்திய அரசு மூலம் செயல்படுத்தப்பட்டது**

**பாதுகாப்பான விவசாயிகள், நாட்டின் பெருமை**



Azadi Ka Amrit Mahotsav

## விவசாயிகளுக்கு உதவுவதற்கு பிரதான் மந்திரி ஃபசல் பிமா யோஜனாவிற்கான கேள்வித்தாள்:

**கேள்வி : பிரதம மந்திரி ஃபசல் பிமா யோஜனா என்பது என்ன?**

**பதில் :** பிரதான் மந்திரி ஃபசல் பிமா யோஜனா (PMFBY) என்பது பயிர் தொடர்புடைய ஆபத்துகளுக்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுவதற்காகும். இந்தத் திட்டத்தின் மூலம், எதிர்பாராத அல்லது சாதகமற்ற வானிலை நிலவரங்கள் காரணமாக ஏற்படும் இழப்பிற்கு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது.

**கேள்வி: பயிர் காப்பீட்டை யார் பெற்று பயனடையமுடியும்?**

**பதில் :** குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்ட பயிர்களை பயிரிடும் அனைத்து கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத (பங்குபயிரிடுபவர்/ குத்தகைதாரர்) விவசாயிகள் பலனை பெற்றுக் கொள்ளலாம். கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகள் அனைவருக்கும் பதிவு செய்து கொள்ளுதல் தன்னார்வத்தினால் ஆகும். எந்த கடன் பெற்ற விவசாயியும் பிரதான் மந்திரி ஃபசல் பிமா யோஜனா மூலம் பயன் பெற விரும்பவில்லை என்றால், அவர் சிறப்பு மற்றும் ராபி பருவத்தில் பயிர் காப்பீட்டிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்று வங்கியினால் வழங்கப்பட்ட படிவத்தில் (விலக்கு) எழுத்துபூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான கடைசி தேதி கடைசி தேதிக்கு 7 நாட்களுக்கு முன்பே ஆகும்.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான காப்பீட்டுத் தொகை என்னவாக இருக்கும்?**

**பதில் :** மாநில அரசினால் அறிவிக்கப்பட்டபடி.

**கேள்வி: பயிர் காப்பீட்டிற்காக விவசாயினால் செலுத்தப்பட வேண்டிய பிரீமியம் கட்டணங்கள் என்ன?**

**பதில் :** சிறப்பு மற்றும் ராபி பயிர்களுக்காக 1.5% மற்றும் வர்த்தக மற்றும் தோட்டப்பயிர்களுக்காக காப்பீடு செய்யப்பட்ட தொகையின் 5% ஆகும்.

**கேள்வி : பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் என்ன இடர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன?**

**பதில் :** இந்தத் திட்டத்தின் கீழ் பயிர் இழப்பிற்கு வழிவகுக்கும் பயிர் இடர்கள் பின்வருமாறு:

1) விதைப்பு, நடவு, முளைவிடும் ஆபத்துகள் தடுக்கப்பட்டது : காப்பீடு செய்யப்பட்ட பகுதியில் மழை பற்றாக்குறை காரணமாக அல்லது பாதகமான பருவநிலை/வானிலை நிலவரங்கள் விளைவாக ஏற்படும் இழப்புகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

2) நிலைப்பயிர் (விதைப்பு முதல் அறுவடை வரை) : வறட்சி, வறண்ட நிலைகள், வெள்ளம், வெள்ளப்பெருக்கு, பூச்சி மற்றும் நோய்களின் பரவலான தாக்கம், நிலச்சரிவுகள், இயற்கை தீ, இயற்கை மின்னல், புயல், ஆலங்கட்டி மழை மற்றும் சூறாவளி முதலான பேரிடர் காரணமாக மகசூல் இழப்பிற்கு எதிராக ஓர் விரிவான ஆபத்து காப்பீடு வழங்கப்படுகிறது.

3) அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் : ஆலங்கட்டி மழை, புயல், புயல்மழை மற்றும் பருவம்தவறிய மழை காரணமாக அறுவடைக்கு பிறகு அதிகபட்சம் 14 நாட்களுக்கு நிலத்தில் வெட்டி உலர்த்துவதற்காக, சிறு கட்டுகளாக கட்டுவதற்காக பரப்பி வைக்கப்பட்டிருந்த பயிர்கள் சேதம் அடைந்திருக்கும் நிலையில் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

4) உள்ளூர் பேரிடர் : குறிப்பிடப்பட்ட பகுதியில் ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு, இடிமின்னல் மழை மற்றும் மின்னல் காரணமாக இயற்கை தீ போன்ற உள்ளூர் பேரழிவுகள் காரணமாக உண்டாகும் பயிர் இழப்பு/சேதத்திற்கு தனிமைப்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீடு கொண்டு பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் என்ன இடர்கள் காப்பீடு செய்யப்படுவதில்லை?**

**பதில் :** இந்தத் திட்டத்தின் கீழ் போர் மற்றும் அணு ஆபத்து, தீங்கிழைக்கும் சேதம் மற்றும் மற்ற தடுக்கக்கூடிய இடர்கள் காரணமாக ஏற்படும் இழப்பு விலக்கப்படுகிறது.

**கேள்வி: இந்தத் திட்டத்தின் கீழ் கடன்பெறாத விவசாயி எவ்வாறு காப்பீடு எடுத்துக் கொள்ள முடியும்?**

**பதில்:** பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற விரும்பும் கடன்பெறாத விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள வங்கி கிளை/கூட்டுறவு சங்கம்/ அங்கீகரிக்கப்பட்ட சேனல் பார்ட்னர்/ பொது சேவை மையம் (இகுஇ)/காப்பீட்டு நிறுவனம் அல்லது தங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் தொடர்பு கொள்ளலாம் அல்லது அவர்கள் தனிப்பட்ட முறையில் தேசிய பயிர் காப்பீடு போர்ட்டல் டஞ்ஞணீண்://தீதீதீ.ணீட்னுஏதூ.ஞ்ணிதி.டிண-க்கு கெடு தேதிக்கு முன்பாக சென்று ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பலாம்.

**கேள்வி: பயிர் காப்பீடு பெறுவதற்காக கடன் பெறாத விவசாயி சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் என்ன?**

**பதில்:** கடன் பெறாத விவசாயிகள், முன்மொழிவு படிவம், பதிவுப் படிவம், அடங்கல், ஆதார் அட்டையின் நகல், மற்றும் வங்கி பாஸ் புக்கின் முதல் பக்கம்.

**கேள்வி: பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒரு காப்பீட்டு யூனிட் என்பது என்ன?**

**பதில் :** நெல் - II அறிவிக்கப்பட்ட யூனிட் கிராமம் மற்றும் அறிவிக்கப்பட்ட பயிருக்கு குறு வட்டம்.

**கேள்வி : உள்ளூர் பேரிடர்களின் காரணமாக ஏற்படும் பயிர் இழப்பு சம்பவங்கள் குறித்து தெரிவிக்கும் செயல்முறை என்ன?**

**பதில் :** பாதிக்கப்பட்ட காப்பீடு செய்துகொண்ட விவசாயி சம்பவத்தின் 72 மணிக்குள்ளாக காப்பீட்டு நிறுவனத்தின் கட்டணமற்ற எண் 18002660700 மீது நேரிடையாக தெரிவிக்க வேண்டும் அல்லது வங்கி/வேளாண் துறை அதிகாரிகள் மூலம் எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டும். விவசாயியினால் முழு விவரமும் 72 மணிக்குள்ளாக வழங்கப்படவில்லை என்றால், பின்னர் குறிப்பிடப்பட்ட படிவத்தில் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கு விவசாயியினால் முழுமையான தகவல் வழங்கப்பட வேண்டியது அவசியம்.

பயிர்க் கடன்கள் பெற்றுக்கொள்ளும் விவசாயிகள் இந்தத் திட்டத்திலிருந்து விலகி இருப்பதற்கு சேர்க்கைக்கான இறுதி தேதியிலிருந்து 07 நாட்களுக்கு முன்பாக தொடர்புடைய வங்கிக்கு எழுத்து மூலம் விலகி இருப்பதற்கான அறிவிப்பு அளிக்க வேண்டியது கட்டாயமாகும்.


| மாவட்டம் | அறிவிக்கப்பட்ட பயிர்கள் | காப்பீட்டுத் தொகை (ரூ/ஹெ) | விவசாயி பிரீமியம் (ரூ/ஹெ) | சேர்க்கை இறுதி நாள் |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | உருளைக்கிழங்கு | 87315.00 | 4365.75 | 31-01-2023 |
| | நெல் - II | 90155.00 | 1352.33 | 31-10-2022 |
| | நெல் - III | 90155.00 | 1352.33 | 31-01-2023 |
| | சிவப்பு மிளகாய் | 65332.00 | 3266.60 | 31-01-2023 |
| | கத்தரி | 67925.00 | 3396.25 | 31-01-2023 |
| | நிலக்கடலை (வேர்க்கடலை) | 51006.00 | 765.09 | 31-12-2022 |
| | வாழை | 175988.00 | 8799.40 | 28-02-2023 |
| | தக்காளி | 96330.00 | 4816.50 | 31-01-2023 |
| | முட்டைகோஸ் | 65826.00 | 3291.30 | 31-01-2023 |
| புதுக் கோட்டை I | நெல் - II | 80399.00 | 1205.99 | 15-11-2022 |
| | கரும்பு - பருவகால/சுரு/ஆலை | 128440.00 | 6422.00 | 31-03-2023 |
| | நிலக்கடலை (வேர்க்கடலை) | 67678.00 | 1015.17 | 31-01-2023 |
| | வாழை | 131034.00 | 6551.70 | 28-02-2023 |
| ராமநாதபுரம் II | நெல் - II | 64961.00 | 974.42 | 15-11-2022 |
| | சிவப்பு மிளகாய் | 69037.00 | 3451.85 | 31-12-2022 |
| | கொத்தமல்லி | 27788.00 | 1389.40 | 18-01-2023 |
| | நிலக்கடலை (வேர்க்கடலை) | 53599.00 | 803.99 | 31-12-2022 |
| | வாழை | 100159.00 | 5007.95 | 28-02-2023 |
| நீலகிரி | உருளைக்கிழங்கு | 256757.00 | 12837.85 | 15-02-2023 |
| | பூண்டு | 259844.00 | 12992.20 | 15-02-2023 |
| | இஞ்சி | 237985.00 | 11899.25 | 28-02-2023 |
| | வாழை | 228228.00 | 11411.40 | 28-02-2023 |
| | கேரட் | 190684.00 | 9534.20 | 28-02-2023 |
| | முட்டைகோஸ் | 194636.00 | 9731.80 | 31-01-2023 |
| திருப்பூர் | மரவள்ளிக்கிழங்கு | 84598.00 | 4229.90 | 28-02-2023 |
| | நெல் - II | 92131.00 | 1381.97 | 15-11-2022 |
| | சிவப்பு மிளகாய் | 60268.00 | 3013.40 | 31-01-2023 |
| | கொத்தமல்லி | 30628.00 | 1531.40 | 31-12-2022 |
| | நிலக்கடலை (வேர்க்கடலை) | 77435.00 | 1161.53 | 31-12-2022 |
| | மக்கா சோளம் - III | 80152.00 | 1202.28 | 30-11-2022 |
| | பச்சைப் பயறு | 41815.00 | 627.23 | 15-11-2022 |
| | சோளம் (சோளம், பெரிய தினை) | 6357.00 | 95.36 | 15-12-2022 |
| | வெங்காயம் | 109545.00 | 5477.25 | 31-01-2023 |
| | வாழை | 240850.00 | 12042.50 | 28-02-2023 |
| | பருத்தி (இழை) - III | 34264.00 | 1713.20 | 30-11-2022 |
| | தக்காளி | 73483.00 | 3674.15 | 31-01-2023 |
| | கொண்டைக்கடலை | 44337.00 | 665.06 | 30-11-2022 |

Bank Branch | CSC e-Governance Services India Limited | www | Co-operative committee

கடன்தாரர் அல்லாத விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள நிதி நிறுவனங்கள் அதாவது தேசியமயமாக்கப்பட்ட வங்கி, கூட்டுறவு வங்கிகள், முதன்மை வேளாண்மை கூட்டுறவு சங்கம் (PACCS), பிராந்திய கிராமப்புற வங்கிகள்/காப்பீட்டு இடைத்தரகர்/ பொதுவான சேவை மையம் (CSC) மூலம் / சுயமாக இணையதளம்: https://pmfby.gov.in./ மூலம் தங்கள் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம். இந்திய அரசு கால் சென்டர் எண் 1800 180 1551.

உள்ளூர் பேரிடர்கள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் அல்லது கோருரிமை தகவல் பற்றிய தகவலைப் பெற, தயவுசெய்து பிளே ஸ்டோர் லாக்இன் செய்து க்ராப் இன்ஷ்யூரன்ஸ் ஆப்-ஐ பதிவிறக்கம் செய்யவும்.

GET IT ON Google Play






**திட்டத்திற்கான மேலும் தகவலைப் பெற, தயவுசெய்து அழைக்கவும் :**
**கட்டணமற்ற எண்: 1800 2660 700**
**மின்அஞ்சல்: E-mail: pmfby.tamilnadu@hdfcergo.com**

ஹெச்டிஎஃப்சி எர்கோ ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட். ஐஆர்டிஏஐ பதிவு எண் 146. CIN: U66030MH2007PLC177117. பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : முதல் தளம், ஹெச்டிஎஃப்சி ஹவுஸ், 165-166, பேக்பே ரெக்ளமேஷன், ஹெச். டி. பாரேக் மார்க், சர்ச்கேட், மும்பை - 400020. ஆபத்து காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை/தகவல் தொகுப்பு அறிக்கையை கவனமாகப் படிக்கவும். மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தக சின்னம் ஹெச்டிஎஃப்சி லிட். மற்றும் எர்கோ இன்டர்நேஷனல் ஏஜி-க்கு சொந்தமானது மற்றும் உரிமத்தின் கீழ் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. UIN: Pradhan Mantri Fasal Bima Yojana - IRDAN125P0003V01201617. CSC - Pradhan Mantri Fasal Bima Yojana-HDE-AG-P18-25-V01-17-18 UID: 11327.